Registered as a Newspaper

A/L 86
GENETICS
(பிறப்புரிமையியல்)
ஆசிரியர்:
திரு. பாலா
22ஆம் தேதி
பி.ப. 3.00 மணிக்கு
ஆரம்பம்.
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை — கோப்பாய்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1/=

நடைபெறுகிறது...
A/L 87 அலகு 05
(தாவர ராச்சியப் பிரிவுகள்)
சனி, ஞாயிறு 5-00 P.M.
A/L 88 அலகு 01
உயிர் உள்ளவற்றின் அமைப்பு
சனி, ஞாயிறு 4-00 PM
ஆசிரியர்:
திரு. பாலா
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை — கோப்பாய்

மலர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு பங்குனி மீ 7 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 8 (20-03-1986) UTHAYAM – A LIVELY TAMIL DAILY இதழ்:105



மீன்பிடித் தடையை ஆட்சேபித்து நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

இலங்கைத் தமிழர் நிலை—

# தமிழகம் மீண்டும் மத்திய அரசிடம் —விளக்கும்—

## நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, மார்ச் 19

இலங்கைத் தமிழர் நிலை குறித்தும், அவர்களது பிரச்சினை விரைவில் தீர்க்கப்படவேண்டியதன் அவசியம் குறித்தும் தமிழக அரசு மிக விரைவில் மீண்டும் மத்திய அரசாங்கத்திடம் விளக்கிக் கூறும்.

தமிழக நிதி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் இத் தகவலை வெளியிட்டார்.

வரவு - செலவுத்திட்ட உரையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பக் கூடிய உகந்த சூழ்நிலை உருவாகும்வரை தமிழகத்தில் கண்ணியத்துடனும் கௌரவத்துடனும் பராமரிக்கப் படுவார்கள்.

இலங்கைத் தமிழ் அகதிகளின் பராமரிப்புக்கு என்று 45 கோடி ரூபா தமிழக அரசால் செலவிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் இன்னல்களுக்குள்ளாவது தமிழக மக்களுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் மிகுந்த மன உளைச்சலைக் கொடுத்துள்ளது.

ஜனநாயக, மரபுகளை,

(4 ஆம் பக்கம் பார்க்க)

5 முஸ்லிம் விவசாயிகள் சுட்டுக்கொலை

## மூதூரில் கடையடைப்பு

### ஜனாதிபதிக்கு முறையீடு

திருகோணமலை, மார்ச் 20

மாட்டு வண்டில்களில் நெல் ஏற்றிக் கொண்டு வந்த 5 முஸ்லிம் விவசாயிகளை மூதூர், மல்லிகைத்தீவுச் சந்தியில் வைத்து சுட்டுக்கொன்ற சம்பவம் குறித்து ஜனாதிபதி, தேசியப் பாதுகாப்பு அமைச்சர், முஸ்லிம் தலைவர்கள் ஆகியோருக்கு முறையிடப் பட்டுள்ளது.

மூதூர் எம். பியும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். இ. எச். மஹ்ரூப் இது சம்பந்தமாக அரசாங்க உயர்

(4ஆம் பக்கம் பார்க்க)

வடபகுதிக்கு

## ரயில் சேவை

### பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்த பின்புதான்

கொழும்பு, மார்ச் 20

வடபகுதி ரயில் சேவை பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் தான் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

சேதமடைந்த ரயில் பாதைகள் இரண்டொரு தினங்களுக்கு இடையில் திருத்தப்பட்டுவிடும் என்றும் ரயில்வே வட்டாரங்கள் கூறின.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைப்பின், வார இறுதியில் இருந்து மீண்டும் வடபகுதி ரயில் சேவை ஆரம்பிக்கப்படக் கூடிய வாய்ப்பு உண்டு என்று கூறப்படுகின்றது.

சுபநேரம்
20-3-1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.48 முதல் 9.18 வரை
ராகுகாலம்:
1·48 முதல் 3.18 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி
மு.ப. 10.48 வரை

## விடுதலை இயக்கங்களுக்கும் கூட்டணிக்கும் இடையில் பிளவை உண்டாக்க அரசு முயற்சி

### செயலதிபர் அமிர்தலிங்கம் குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 19

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழர் விடுதலை இயக்கங்களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தும் விதத்தில் இலங்கை அரசு செயற்படுகிறது. தமிழ் மக்கள் விழிப்புடன் இருந்து இச் சதியை முறியடிக்க வேண்டும். இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் சொன்னதாவது:

வடக்கு-கிழக்கு இணைப்பு ஓர் அடிப்படை விஷயம். இதில் தமிழர் விடுதலைக் கூட்டணி விட்டுக் கொடுக்காது.

அப்பாவித் தமிழ் மக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசனில் மா கப்பல்

திருகோணமலை, மார்ச் 20

917 மெட்றிக் தொன் கோதுமை மாவுடன் 'மாத்தறை' என்ற கப்பல் காங்கேசன்துறை துறைமுகம் வந்து சேர்ந்தது.

## மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் மீது சூடு

### ஒருவர் மரணமானார்

மட்டக்களப்பு, மார்ச் 20

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டு இருந்த இரண்டு இளைஞர் மீது சிப்பாய்கள் சுட்டனர்.

ஒருவர் மரணமானார் மற்றவர் மோட்டார்சைக்கிளுடன் தப்பி விட்டார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போ முன்னால் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றிச் சொல்லப் படுவதாவது:- சிப்பாய்கள் திருமலை வீதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தெல்லிப்பழை கூட்டுறவு சங்க களஞ்சியத்தில் தீ!

## சுமார் 5 லட்சம் ரூபா நஷ்டம்

— காங்கேசன்துறை செய்தியாளர் —

காங்கேசன்துறை, மார்ச் 20

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் 5 லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் களஞ்சிய அறையில் கடந்த செவ்வாய் இரவு 11 மணியளவில் திடீரென தீப்பற்றியது.

உடனடியாக அயலில் உள்ள மக்களும், கடமையில் இருந்த தொழிலாளர்களும் தீயை அணைப்பதில் ஈடுபட்டனர்.

அவர்களது முயற்சியால் ஏனைய இடங்களுக்கும் தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

ஆனாலும் களஞ்சியத்தில் இருந்த ஆயிரம் மூடை மா எரிந்து நாசமாகியது. களஞ்சிய கட்டடமும் மிகவும் எரியுண்டு பலத்த சேதமடைந்தது.

இத் தீவிபத்தால் 5 லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா தெரிவித்தார்.

தீ விபத்திற்கான காரணம் என்ன என்பதுபற்றி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மயில் பிடிக்கப் போய் "புலி"களிடம் அகப்பட்டவர்கள்!

திருகோணமலை, மார்ச் 20

காட்டில் 'மயில்' பிடிக்கப்போய் 'புலி'களிடம் மாட்டிக்கொண்டனர்.

கன்னியாவில் அண்மையில் துப்பாக்கிக் குண்டுகள் தாக்கி இறந்த இரண்டு ஊர்காவல் படை வீரரின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் வெளியானது.

இறந்தவர்கள் லலித் சில்வா, றூபன் பெரேரா ஆகியோர்.

திருமலை நீதிவான் திரு. கலில் ராஜபக்ஸ மரண விசாரணையை நடத்தினார்.

எம். எம். கௌதமதாஸ என்பவர் சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:

இறந்த இரண்டு பேரும் ஊர்காவல்படையினர். சம்பவ தினம் மாலை இறந்தவர்கள் காட்டுக்குள் மயில் பிடிக்கச் சென்றனர். கூட நானும் சென்றேன்.

திடீரென்று காட்டினுள் இருந்து மூன்றுபேர் வெளிப்பட்டு வந்து சுட்டார்கள். நான் தப்பி ஓடி வந்துவிட்டேன்.

சுட்டவர்கள் "கொட்டியாக்கள்" (புலிகள்!).

இப்படி கௌதமதாஸ சாட்சியத்தில் சொன்னார்.

மேல்விசாரணை இக்கட்டத்தில் மார்ச் 24 வரை ஒத்திவைக்கப்பட்டது.

# மீன்பிடித் தடையை ஆட்சேபித்து பேரணி

— உதயன் செய்தியாளர்கள்: க. இரத்தினராஜசிங்கம், வனிதராஜன் —

யாழ்ப்பாணம், மார்ச் 20

வடபகுதிக் கடலில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை ஆட்சேபித்து, மிகப் பிரமாண்டமான பேரணி ஒன்று நேற்று யாழ்நகரில் நடைபெற்றது.

அந்தப் பேரணியில் குடாநாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த மீனவர்களுடன் மத குருமார், பெண்கள், சிறுவர்களும் கலந்து கொண்டனர் பதினாயிரத்துக்கும் மேற்பட்டோர் இப்பேரணியில் கலந்து கொண்டதாக மதிப்பிடப்பட்டது.

குருநகர் கடற்றொழிலாளர் சங்கம் ஏற்பாடு செய்த இப்பேரணியில் குருநகர், கொழும்புத்துறை, நாவாந்துறை, பாஷையூர், ஊர்காவற்றுறை, சுழிபுரம், மண்டைதீவு, நவாலி ஆகிய இடங்களைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட சங்கங்கள், சனசமூக நிலையங்கள் கலந்து கொண்டன.

நேற்றுக் காலை எட்டு மணியளவில் பாஷையூர்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அந்தச் சடலங்களுக்கு பிரேத பரிசோதனை நடந்தது

கிளிநொச்சி, மார்ச் 20

கடந்த ஞாயிற்றுக் கிழமை வட்டக்கச்சி இரண்டாம் வாய்க்கால் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி மரணமான எட்டுப் பேரது சடலங்கள் பிரேத பரிசோதனையின் பின் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன

பிரேதபரிசோதனையை யாழ்ப்பாணம் உதவிச் சட்ட வைத்திய அதிகாரி எஸ். பரிமேலழகர் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தார்.

இந்த எட்டு சடலங்களும் இதுவரை அடையாளம் காணப்படாததால் அவைகளை அரச செலவில் அடக்கம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## உருக்குலைந்த சடலம் கடத்தப்பட்டது

கிளிநொச்சி, மார்ச் 20

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனை செய்யப்படாமல் புழுப்பிடித்த நிலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தை இறந்தவரின் உறவினர்கள் மனம்பொறுக்க முடியாமல் கடத்திச் சென்று அடக்கம் செய்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ட்ரூ - ஸாரா திருமணம் நிச்சயம்

லண்டன், மார்ச் 19

எலிஸெபெத் மகாராணியின் இரண்டாவது புதல்வர் இளவரசர் அன்ட்ருவுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டதாக பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இளவரசர் அன்ட்ருவுக்கும் (வயது 26) பிரபல வர்த்தகப் புள்ளி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் பெர்னட் சந்திப்பு

புதுடில்லி, மார்ச் 19

இலங்கைத் தூதுவர் திரு. பெர்னட் திலகரத்தின. இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை இன்று புதன்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வைக் காண வேண்டும் என்பதே இலங்கையின் விருப்பம் என்று திரு. திலகரத்தின எடுத்துரைத்தார்.

விமானத் தாக்குதல் நிறுத்தப்பட்டுள்ளது. கடல் கண்காணிப்புவலய கட்டுப்பாடும் நீக்கப்பட்டுள்ளது. ஆனால் போராளிகள் சமாதான முயற்சியை முற்றாக நிராகரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



அதுவும் சரிதான். உந்தப் பிரித்தாளும் தந்திரத்தை பிரிட்டிஷ்காரனிட்டை இருந்து ஒரு சொட்டும் பிசகாமல் கொப்பி அடிச்சது ஒண்டு தான் உவையின்ரை கெட்டித்தனம்....!

விமானத் தாக்குதல்

## தொடருமா? சனியன்று முடிவு

கொழும்பு, மார்ச் 20

இடைநிறுத்தி வைக்கப்பட்ட விமானத் தாக்குதல் தொடருமா?

இது பற்றி சனிக்கிழமைதான் தீர்மானிக்கப் படும் என்று தேசியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி சொன்னார்.

கடந்த சனிக்கிழமை வந்த விமானத்தாக்குதல் இடைநிறுத்தம் ஒரு வாரத்துக்கு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

## காத்தான்குடியில் ஊர்காவல் வீரர்களுக்கு துப்பாக்கி, கிரனேட்!

மட்டக்களப்பு, மார்ச் 20

மட்டக்களப்பில் காத்தான்குடிப் பகுதியில் முதல் தடவையாக 75 முஸ்லிம்கள் ஊர்காவல் படை வீரர்களாக நியமனம் பெற்றனர்.

புதுக் காத்தான்குடி கிராமோதய சபைத் தலைவர் ஜனாப் ஏ. எஸ். பதுறுதீன் இந்த ஊர்காவல் படைக்கு பொறுப்பாக இருக்கின்றார்.

ஒவ்வொரு வீரருக்கும் ஒரு துப்பாக்கி, ஒரு கிரனேட் வழங்கப்பட்டது

ஆயுதங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் பொலீஸ்அதிகாரிகளும் மட்டக்களப்பு 2ஆவது எம்.பி. ஜனாப் றின்வி சின்னலெப்பையும் கலந்து கொண்டார்கள் என்று தெரியவரு

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்பனாவுக்கு ஏசினால் 'மூட்' அவுட்டாகி விடுமாம்

'சின்னவீடு' படத்தில் 'பெரிய வீடாக' அதாவது பாக்கியராஜின் மனைவியாக நடித்தவர் கல்பனா இவர் ஊர்வசியின் சகோதரி என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்! தெரியாதது இவர் ஏற்கனவே பல படங்களில் நடித்திருப்பது.

அதிலும் இவர் நடித்த எல்லாப் படங்களும் 'அவார்ட்' படங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'யாகம்' 'போக்கு வெயில்', 'பனி', 'ஆதி பத்தியம்' முதலிய படங்களில் இவர் முக்கிய கதாபாத்திரம் ஏற்று நடித்திருக்கிறார்.

'சின்னவீடு' படத்தில் வாய்ப்பு கிடைத்தது பற்றி அவர் சொல்கிறார்.

'டைரக்டர் பாக்கியராஜ் சற்று குண்டான உருவமைப்பு உள்ள ஒரு கதாநாயகியைத் தேடிக்கொண்டிருந்தார்.

நான், ஊர்வசி, கலா ரஞ்சினி ஆகியோர் சேர்ந்து எடுத்த ஒரு கலர்ப்படம் பத்திரிகையில் வெளியாகி இருந்தது. இதை டைரக்டர் பாக்கியராஜும் பார்த்திருக்கிறார்.

உடனே என்னைப் பார்க்க வேண்டும் என்று கார் அனுப்பி வைக்கப்பட்டது 'சின்னவீடு' பட விஷயம் என்னிடம் கூறப்பட்டது சம்மதம் சொல்லி விட்டேன்.

ஏற்கனவே படங்களில் நடித்த அனுபவம் இருப்பதால் அவரிடம் திட்டு வாங்கும் அளவுக்கு நடந்து கொள்ளவில்லை.

அதுமட்டும் அல்லாமல், அவரே ஒவ்வொரு 'ஷாட்' டிலும் எப்படி நடிக்க வேண்டும் என்பதை, ஒரு தடவைக்கு இரண்டு தடவை செய்துகாட்டி விடுவார். அதனால் நடிப்பதில் எனக்கு எதுவித கஷ்டமும் இருக்கவில்லை.

இந்தப் படத்தின் ஷூட்டிங்கின்போது எனக்கு உண்டான இன்னொரு பயம் என்னவென்றால், யாராவது ஏசினால் 'மூட்' அவுட்டாகி விடுவேன்.

இந்தப் படப்பிடிப்பின்போது அதுமாதிரி ஏதாவது நிகழ்ந்து விடுமோ என்று பயந்து கொண்டே இருந்தேன். கடவுள் புண்ணியத்தில் அப்படி ஒன்றும் நிகழவில்லை. அதனால் சிறப்பாக நடிக்க முடிந்தது என்றார்.

தினசரி சினிமா

# கருங்கடல் பிராந்தியத்தில் அமெரிக்கக் கப்பல்கள்

## சர்வதேசக் கடல் எல்லை சட்டமீறல் என ரஷ்யா குற்றச்சாட்டு

மாஸ்கோ, மார்ச், 19

ரஷ்யாவுக்குச்சொந்தமான கடற்பிராந்திய எல்லைக்குள் அமெரிக்க கடற்படைக் கப்பல்களின் நடமாட்டம் ஆத்திரத்தைத் தூண்டக்கூடியதாக அமைந்துள்ளது. அத்துடன் இது ஒரு சர்வதேச கடல் எல்லைச் சட்ட அத்துமீறலுமாகும்.

இவ்வாறு ரஷ்யா அமெரிக்காவை ஆத்திரத்துடன் கண்டித்துள்ளது.

கருங்கடலிலுள்ள ரஷ்யப் பிராந்திய எல்லைகளுக்குள்ளேயே அமெரிக்கக் கப்பல்களின் நடமாட்டம் காணப்பட்டதாகவும் இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் ரஷ்யா தரப்பில் மேலும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் எப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அந்த நாடு அறிவிக்கவில்லை.

ரஷ்ய எச்சரிக்கை வெளிவந்த மறுகணமே அமெரிக்காவின் பதில் எச்சரிக்கையும் 'அமெரிக்கக்குரல்' உரத்து ஒலி பெருக்கியது.

ஆத்திரத்தைத் தூண்டக்கூடிய ரஷ்யாவின் இந்த மிரட்டலுக்கு அமெரிக்கா பணிந்து விடாது.

ரஷ்யா எந்தவித நடவடிக்கைகளை எடுக்கிறதோ அதே பாணியிலான எதிர் நடவடிக்கைகளையும் அமெரிக்காமேற் கொள்ளும்.

இவ்வாறு 'அமெரிக்கக் குரல்' வானொலி தெரிவித்தது.

## கொர்பச்சேவ் மே. ஜெர்மனி விஜயம்

பொன், மார்ச் 19

ரஷ்ய அதிபர் கொர்பச்சேவ் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் மேற்கு ஜேர்மனிக்கு விஜயம் மேற்கொள்ளக் கூடும்.

இத்தகவலை மே. ஜேர்மன் சஞ்சிகையான 'ஸ்பீஜெல்' வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு விடயங்களைப் பொறுத்தவரை மேற்கு ஜேர்மனி அமெரிக்காவிலிருந்துவிடுபட்டு சுதந்திரமாக இயங்க வேண்டும்.

இப்படியொரு கருத்தை வலியுறுத்தவே அவர் அந்த விஜயத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### வெளி உலகில்

**நிக்கரகுவா**

## கிளர்ச்சிப் படைக்கு நிதி வேண்டும்

### தனது பிரசாரத்துக்கு மக்களிடம் ஆதரவு கோருகிறார் றேகன்

வாஷிங்டன், மார்ச் 19

நிக்கரகுவா கலகக்காரர்களுக்கு நிதி ஒதுக்கும் விடயம் தொடர்பான தமது பிரச்சாரத்துக்கு மக்களிடம் ஆதரவு கோரியுள்ளார் ஜனாதிபதி றேகன்.

தொலைக்காட்சியில் தோன்றி றேகன் விடுத்த இந்த வேண்டுகோளில் நிக்கரகுவா கலகப் படைகளுக்கு 10 கோடி டாலர் ஒதுக்கும் திட்டம் பற்றி விளக்கினார்.

அமெரிக்க காங்கிரஸிடம் தான் தொடர்ந்து இது பற்றி அழுத்திக் கூறி வருவதாகவும் தமது இந்தப் பிரச்சாரத்தை தீவிரமாக ஆதரிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

நிக்கரகுவா அரசை அழித்தொழிப்பதில் றேகன் தீவிர ஆர்வம் காட்டி வருவதும் நிதி ஒதுக்கீடு விடயத்தில் றேகனுக்கு காங்கிரஸ் வளைந்து கொடுக்காமல் இருப்பது தெரிந்ததே.

1984 ஆம் ஆண்டு நிக்கரகுவாவுக்கு நிதி அளிப்பதை நிறுத்தி விட்டது.

**பிரான்ஸில்**

# புதிய ஆட்சியை அமைக்குமாறு ஜெருச்சுக்கு நேற்று அழைப்பு

## ஏற்றுக்கொண்டதாக அறிவிப்பு இல்லை

பாரிஸ், மார்ச் 19

பிரான்ஸ் ஜனாதிபதி மித்தரான்ட் புதிய அரசை அமைக்குமாறு வலதுசாரி டீகோலிஸ்ட் அணித் தலைவருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

புதிய பிரதமராக வர வாய்ப்புப் பெற்றுள்ள ஜாக்கியூஸ் ஜெருக் இந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பது பற்றி உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

577 ஆசனங்கள் கொண்ட நாடாளுமன்ற தேர்தலில் எதிர்க்கட்சிக் கூட்டணி குறைந்தளவு பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கும் தகைமை பெற்றுள்ளது தெரிந்ததே.

ஜனாதிபதி மித்தரான்டும் வலதுசாரி அணித் தலைவர் ஜெருச்சும் சந்தித்து இரண்டு மணி நேரம் பேச்சுக்கள் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே பிரான்ஸ் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள வலதுசாரி கூட்டணி பிரதமருடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளத் தான் ஆயத்தமாக இருப்பதாக ஜனாதிபதி மித்தரான்ட் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் அரசியல் வரலாற்றில் இரண்டு வேறுபட்ட அணிகளின் தலைவர்கள் உயர்மட்ட அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது இதுவே முதற் தடவையாகும் எனக் கூறப்படுகிறது.

சோஷலிட்டான ஜனாதிபதி மித்தரான்ட் 1988 ஆம் ஆண்டு வரை பதவியிலிருக்க அதிகாரம் பெற்றுள்ளார்.

பிரான்ஸில் மித்தராண்டின் செல்வாக்கும் சரிந்து கொண்டிருப்பதாகவும் மேற்கு நாட்டு அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

சரிந்து கொண்டு போகும் செல்வாக்கை முட்டுக் கொடுத்துக் காப்பாற்றவே மித்தராண்ட் 'அதிகார பகிர்வு' பற்றிய அறிவிப்பை விடுத்துள்ளதாகவும் அந்த விமர்சனங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் புதியஆட்சியை அமைக்கப் போகும் திரு. ஜெருச் இதற்கு முன்பும் 1974 — 1976 வரை பிரதமராக பதவி வகித்தவராவார்.

## இந்தியா விமானங்கள் வாங்கும்

புதுடில்லி, மார்ச். 19

இந்தியன் எயர்லைன்ஸ் விமான நிறுவனம் பிரயாணிகள் சேவைக்கான 19 விமானங்களை கொள்முதல் செய்ய இருக்கிறது.

புதிய வர்த்தகரீதியான 320 ரக இந்த விமானங்களை வாங்குவதற்கான உடன்படிக்கையும் கைச்சாத்தாகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிலிப்பீன்ஸில் அணு ஆயுதம்

ஸ்டொக்ஹோம், மார்ச் 19

திருமதி அக்கியூனோவின் அரசாங்கம் பிலிப்பீன்ஸின் சிக்கலான சில கொள்கைகள் பற்றி ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

பிலிப்பீன்ஸிலுள்ள அமெரிக்க இராணுவத் தளங்களில் அணு ஆயுதங்கள் சேமிக்கப்படுவது தொடர்பான கொள்கைகளே தீவிரமான மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 20,

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நான்கு நாள் வதிவிடக் கருத்தரங்கு நேற்றுக் கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகியது.

சர்வதேச சுதந்திர ஆசிரியர் தொழிற் சங்க சம்மேளனம், சர்வதேச ஆசிரியர் கூட்டணி, பிரட்ரிக் ஈபேட் இப்ருங்ருங், இலங்கை மன்றக் கல்லூரி ஆகியவற்றின் சார்பில் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

## பிரஜைகள் குழு கூட்டம்

சுன்னாகம், மார்ச் 20

சுன்னாகம் பிரஜைகள் குழுவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு சுன்னாகம் ஸ்ரீமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

தலைவர் திரு. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும் இப்பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

## நேற்றிரவு கோட்டைப் பக்கமிருந்து வந்து விழுந்த குண்டுகள்

யாழ். பஸ் நிலையப் பக்கமாக நேற்றிரவு 10 மணியளவில் அடுத்தடுத்து மூன்று குண்டுகள் விழுந்து வெடித்தன. யாழ். கோட்டைப் பக்கத்திலிருந்து ஏவி விடப்பட்ட குண்டுகள் அவை என்று தெரிவிக்கப்படுகிறது.

• முதலாம் பக்கச் செய்தி சமநாத - 16-8-86

இப்படியான அசம்பாவிதங்களில் பொதுமக்கள் சிக்கித் தவிக்கக் கூடாது என்ற பெருநோக்குடனேதான் 'கோட்டைக் குண்டடி (சாதாரணம்) பாயும் தூரத்திற்கு அப்பால் உள்ள

(4ஆம் பக்கம் 1ஆம் கலம் பார்க்கவும்.)

★ தங்கவேலாயுதபுரம் படுகொலைகள்

# உண்மைகளை நிரூபிக்கத் தயார்;

## அக்கரைப்பற்றுபிரஜைகள்குழுதலைவர்அறிக்கை

அம்பாறை, மார்ச். 20

"அம்பாறை மாவட்டத்தில் வாழும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை இனி எவரும் குலைக்க முடியாது; அவ்வாறு இரு இனங்களையும் பிரிப்பதற்கு முயற்சிக்கும் பேர்வழிகளின் சதி நடவடிக்கைகளுக்கும் நாம் இடமளிக்கமாட்டோம்.

உடும்பன்குளம் - தங்கவேலாயுதபுரம் பகுதியில் முஸ்லிம்களில் காணிகளில் எவரும் பலாத்காரமாக நெற்செய்கை மேற்கொள்ளவோ, அறுவடை செய்யவோ இல்லை முஸ்லிம்களே தமிழர்களுக்குக் குத்தகை அடிப்படையில் காணிகளை செய்கைக்கு வழங்கியுள்ளனர்"

அம்பாறை மாவட்ட உடும்பன்குளச் சம்பவங்கள் தொடர்பாக, அக்கரைப்பற்று பிரஜைகள் குழுத்தலைவர் ஜனாப். ஏ. எம். அஹமது லெவ்வை, பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் வருமாறு;

"கடந்த 20 02.86ஆம் திகதி உடும்பன்குளச் சம்பவங்களுக்கு ஐந்து முஸ்லிம்களின் உயிரிழப்பே காரணமென்றும் முஸ்லிம்களின் காணியில் பயங்கரவாதிகள் அறுவடை செய்யும்பொழுது ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் விளம்பரப்படுத்தப்பட்டன.

நான் அறிந்த வரையில் இது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும். இந்தச்செய்தி இப்பகுதி தமிழ், முஸ்லிம் மக்களை எவ்விதத்திலும் சலனப்படுத்தவில்லை.

1985 சித்திரை மாதத்தில் நிகழ்ந்த இனக்கலவரத்தின்போது, தமிழர்களும், முஸ்லிம்களும் கடத்தப்பட்டும், கொலையுண்டதும் நாம் அறிந்த பழைய சம்பவங்களாகும்.

இங்கு பிரஜைகள் குழுவும், சமாதானசபையும் இன ஒற்றுமையை வளர்த்துவருகின்றதுடன், தமிழ், முஸ்லிம் இனங்கள் எவ்வித பிரச்சினைகளுமின்றி சந்தோஷமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

முஸ்லிம்களின் காணிகளை தமிழர்கள் அபகரித்துச் செய்தார்கள் என்பதும் அப்பட்டமான பொய்யாகும்.

முஸ்லிம்களின் 30 ஆயிரம் ஏக்கர் காணியில் 1985 இனக்கலவரத்தின் போது இடைப்போகம் செய்கைபண்ணப்படவில்லை என்பது உண்மை.

ஆனால் 1985 மகாபோகத்தில் முஸ்லிம்களின் காணிகள் யாவற்றிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடையும் நடைபெற்றுக் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இது வளர்ந்துவரும் தமிழ், முஸ்லிம் ஒற்றுமைக்கும் சான்றாகும்.

இதேவேளை, நிந்தவூர், கல்முனைப் பகுதிகளிலிருந்து இங்கு வேளாண்மை செய்யும் முஸ்லிம்களின் காணிகளைத் தமிழர்கள் குத்தகைக்குப் பெற்று செய்கை பண்ணி வருகின்றனர்.

அதற்கு காணிச் சொந்தக்காரர்களான முஸ்லிம்களிடமிருந்து, முறையான குத்தகை அத்தாட்சியையும் அவர்கள் பெற்றுள்ளனர்.

ஒரு விசாரணையின் போது இந்தஉண்மையை எம்மால் நிரூபிக்க முடியும். உடும்பன்குளத்தில் வேளாண்மை செய்த திரு. ஆறுமுகம் நல்லதம்பி (வயது65)யும் அவ்வாறே குத்தகை அத்தாட்சி பெற்றிருக்கின்றார்.

திரு. நல்லதம்பிபோடியாரின் குடும்பத்தில் நான்குபேர் கொலையுண்டுள்ளனர்.

முஸ்லிம்களின் காணிகளைத் தமிழர்கள் அபகரிக்கவில்லை என்பதற்கு சாட்சியம் கூற பல முஸ்லிம் விவசாயிகள் தயாராயுள்ளனர்.

பத்திரிகைகளிலும் வானொலியிலும் உண்மைக்குப் புறம்பாகத் திரித்துக் கூறப்பட்டவாறு இங்கு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை.

இவர்களுடைய பிரச்சாரத்தால் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கு சிறிதளவும் ஊறு ஏற்படவில்லை"-இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆயுதக் கடத்தல்**

## ஓய்வு பெற்ற சிப்பாய் கைதானார்

கொழும்பு. மார்ச், 20

ஆஸ்திரேலியாவில்இருந்து வந்த பிரயாணப் பையினுள் ஆயுதங்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக, ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய்ஒருவரை இரகசியப் பொலிசார் கைது செய்தனர்.

பிரயாணப் பைக்குள் வைக்கப்பட்டிருந்த பிஸ்கட் பெட்டிக்குள் 2 பிஸ்டல்கள், 2 ரைபிள்கள், 1,000 தோட்டாக்கள் வைக்கப்பட்டிருந்ததாக சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

இந்தமுன்னாள்ராணுவ சிப்பாய் ஆஸ்திரேலியா பாஸ்போட் வைத்திருந்தார். வேட்டைக்குப் பயன்படுத்தவே இந்த ஆயுதங்களைத் தருவித்ததாக அந்த முன்னாள் சிப்பாய், விசாரணையின் போதுஒப்புக் கொண்டாராம்.

சி. ஐ. டி. பொலிசார் இது சம்பந்தமாக விசாரணை நடத்துகின்றனர்.

## மக்கள் முகம்

### யாழ்ப்பாணம் பெரியகடை சமாதானசபை

யாழ்ப்பாணம், மார்ச். 20

யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதிக்கு உரிய சமாதானசபை கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குராப்பணம் செய்யப்பட்டது.

கிராமசேவையாளர் திரு. சி. க. பாலசிங்கம் தலைமை வகித்தார்.

நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ஈ. ஆர். திருச்செல்வம். உபதலைவர்: திரு. பா. பாலயோகன். செயலாளர்: திரு. க. சுசீந்திரன் உபசெயலாளர்: திரு. என். எம். தாஜ் பொருளாளர் திரு. இ. இராகுலன்.

6 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

### சமாதான சபைத் தலைவர்

யாழ்ப்பாணம், மார்ச். 20

தெல்லிப்பளை வடமேற்கு சமாதான சபையின் புதிய தலைவராக திரு. செ. பத்திநாதர் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக திரு. க. குழந்தைவேலுவும் பொருளாளராக திரு. நடராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

### ஒன்று கூடல்

சுண்டுக்குளி, மார்ச். 20

யாழ் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தின் ஒன்று கூடலும் வருடாந்த மதியபோசன விருந்தும் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும்.

இந்த நிகழ்ச்சிக்கு உதவி அரசாங்க அதிபர் எஸ். பி. பாலசிங்கம் பிரதம அதிதியாக கலந்து கொள்கிறார்.

மதியபோசன விருந்து தொடர்பான நிகழ்ச்சிகள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

### நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 20

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் விசேட பொதுக் கூட்டம் ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் திரு. செ. துரைசிங்கம் தலைமை வகிப்பார்.

## நயினை நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு நிதி சேகரிக்கப்படவில்லை

### தேவஸ்தான சபைத் தலைவர் அறிவிப்பு

சுண்டுக்குளி, மார்ச். 20

நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பேரால் நிதியோ, பொருள்களோ வசூலிக்க வரும் எவருக்கும் எதுவிதத்திலும் உதவ வேண்டாம்.

இவ்வாறு நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தான சபைத்தலைவர் திரு. த. குலசேகரம் விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது.

அண்மையில் இடம் பெற்ற அசம்பாவிதங்களால் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருளாலயத்தில் கலைச்செல்வங்களான தேர்கள், மஞ்சம், சப்பரம் என்பனவும், திருக்கோயில் கோபுர வாசல் கதவும் மற்றும் கட்டிடங்களும் எரிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து சந்தர்ப்பவாதிகள் சிலர் ஆலயத் திருப்பணிக்கென நிதியும் பொருள்களும் வசூலித்து வருவதாக அறங்காவலர் சபைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் செயல் வருந்தத்தக்கதும் கண்டிக்க வேண்டியதுமாகும்.

ஆலயத் திருப்பணிக்கென நிதியோ, பொருள்களோ ஆலய அறங்காவலர் சபையினர் வசூலிக்கவில்லை எனவும் அதற்காக எவரையும் அறங்காவலர் சபையினர் நியமிக்கவில்லையெனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## புனித இயக்கங்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோள்

(இயக்கச்சி) முள்ளியான் மண்டலாய் பிள்ளையார் கோயிலடியில் உள்ள எமது தென்னந் தோட்டத்தில் இரு வாரங்களுக்கு முன் களவாடப்பட்ட டீசல், மண்ணெண்ணெய் (பரல்களுடன்) உழவு இயந்திர உதிரிப்பாகங்கள், நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள், 1500 அடி நீள 2" (அங்குல) அல்கதீன் குழாய்களும் அதற்குரிய இணைப்பு உதிரிப்பாகங்களும் முட்கம்பி றோல்கள் ஆகியவற்றைத் திரும்பப் பெற்றுத்தருமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

ஆயிரக் கணக்கான தென்னை மரங்கள் தக்க நீர்ப்பாசன வசதியின்றி அழிந்துபோகா வண்ணமும் மேற்கொண்டு தோட்டத்தை நிர்வகிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதனால் களவுபோன பொருள்களை சிரத்தை எடுத்து மீட்டுத்தருமாறு புனிதமான இயக்கங்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

இங்ஙனம்,
நிர்வாகம்,
ஆர். வி. ஜி. தோட்டம்,
(முள்ளியான் (இயக்கச்சி).

20-3-1986.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

உங்களது அன்னைக்குப் பணி செய்வதாகச் சாக்குக் கூறி உலகப் பற்றிற்கு உங்களை ஆளாக்கிக் கொள்ளாதீர்கள்.

- அன்னை சாரதாதேவி

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073
20-03-86 த. பெ. 23

## மனிதாபிமானம் நிரந்தரமாக வேண்டும்

பூஸா, வெலிக்கடை, மகஸீன் ஆகிய சிறைக்கூடங்களில் தடுப்புக்காவலில் உள்ளவர்களை அவர்களின் உறவினர் சென்று பார்க்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

பயங்கரவாதச் சந்தேக நபர்கள் என்ற முத்திரையுடன் பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் முன் கண்ட மூன்று சிறைக்கூடங்களிலும் நரக வேதனையை அனுபவித்து வருகிறார்கள்.

சாதாரண கைதிகளை அவர்களது உறவினர்கள் மாதத்தில் ஒரு தடவையாவது சந்திக்க வாய்ப்புண்டு. ஆனால் பயங்கரவாதச் சந்தேக நபர்கள் என நாமம் சூட்டப்பட்டவர்களை வருடத்தில் ஒரு முறை தானும் உறவினர்கள் கூட சந்திக்க முடியாது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் விசேஷ அனுமதி பெற்றால் மட்டுமே சிறைக்கூடங்களில் உள்ள தமிழ் இளைஞர்களைச் சந்திக்கலாம் என்ற நிபந்தனை இருந்தது. அந்த விசேஷ அனுமதியைப் பெறுவது என்பது முயற்கொம்பு. அதிர்ஷ்டம், செல்வாக்கு இருந்து அதனை ஒரு முறை பெற்றாலும் அத்தோடு போதும் போதும் என்றாகிவிடும்!

இதனால் தங்கள் பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள் என்பதை நேரில் பார்க்க முடியாது துயரப்படும் தமிழ்ப் பெற்றோர் பெரும் எண்ணிக்கையினர்.

மூன்று சிறைக்கூடங்களிலும் தடுப்புக்காவலில் இருப்போரை உறவினர்கள் நேரில் சென்று பார்க்க வசதி செய்யப்பட்டிருப்பது தமிழ்ப் பெற்றோரின் வயிற்றில் பால் வார்த்தது போலாகும்.

தமிழ்ப் பெற்றோரின் துன்ப துயரத்தைப் புரிந்து கொண்டு இந்த வசதியை இப்போதாவது ஏற்படுத்திக் கொடுத்த அரசாங்கத்தின் மனிதாபிமானத்தை வரவேற்கிறோம். இதில் முன்னின்று உழைத்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி அவர்களையும் பாராட்டலாம்.

எனினும் சர்வதேச மன்னிப்புச் சபை, அடிப்படை உரிமைகள் ஆணைக்குழு போன்ற சர்வதேச நிறுவனங்களின் நெருக்குதல் இல்லாதிருப்பின், அரசாங்கத்துக்கு இந்த மனிதாபிமானம் உதித்திருக்குமா என்பது சந்தேகமே!

சிறைக்கூடங்களில் இருக்கும் தமிழ் இளைஞர்கள் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். மனித அடிப்படை உரிமைகள் அங்கு மீறப்படுகின்றன. இவ்வாறு அவை கண்டனக்குரல் எழுப்பிய போதெல்லாம் அரசு மறுத்து வந்தது.

இப்போது அதற்கு இந்தத் திடீர் "ஞானம்" பிறந்தமைக்கு சர்வதேச அமைப்புகளின் நெருக்குவாரமே அன்றி வேறல்ல.

இந்தச் சிறு சலுகை மட்டும் மனித உரிமைகளைப் பேணுவதற்குப் போதுமானது அல்ல.

பயங்கரவாதச் சந்தேக நபர்கள் என்ற முத்திரையுடன் மூன்று நான்கு வருடங்களுக்கு மேலாகவும் பல தமிழ் இளைஞர்கள் சிறைவாசம் அனுபவிக்கிறார்கள்.

அவர்கள் மீது வழக்குத் தொடருவதற்கு தகுந்த ஆதார, அத்தாட்சிகள் இருந்தால் வழக்குத் தொடர வேண்டும். இல்லையேல் அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால், அதனை விசாரித்து விரைவில் தீர்ப்பு வழங்க வகை செய்ய வேண்டும்.

அதுதான் நீதி; நியாயம்; தர்மமும் கூட. சர்வதேச நிறுவனங்கள் இதனை இலங்கை அரசுக்கு மீண்டும், மீண்டும் இடித்துரைக்க வேண்டுகிறோம்.

அடுத்தது —

தமிழ்ப் பெற்றோர் தென்னிலங்கைக்குப் போவது என்பது இப்போது எமன் உலகுக்குப் போய் தப்பி வருவதற்கு ஒப்பாகும். அதில் உள்ள கஷ்ட துன்பங்களை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆகையால், அரசுக்கு உண்மையாகவே மனிதாபிமான உணர்வு ஏற்பட்டிருப்பின், தமிழ் இளைஞர்களை — வழக்குத் தாக்கல் செய்வதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருப்பதாகக் கருதப்படுவோரை தமிழ்ப் பகுதிகளில் உள்ள சிறைக்கூடங்களுக்கு மாற்ற வேண்டும். அப்போதுதான் அரசுக்கு உதித்த மனிதாபிமானத்தை நிரந்தரமானது எனக் கொள்ள முடியும்.

மீன்பிடித் தடைச்சட்டம்

## கஷ்ட நிலையில் 500 மீனவர் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

மீன்பிடித் தடைச் சட்டத்தினால் 500 மீனவக் குடும்பங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்த முடியாது கஷ்டப்படுகின்றனர். அவசரமாக நிவாரண உதவிகளை மேற்கொள்ளுங்கள்.

இப்படி யாழ்அரசாங்க அதிபருக்கு அனுப்பிய மகஜரில் பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலையம்வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ் ஏரிப்பரவைக் கடலில் லைட்ஹவுஸுக்குத் தெற்குப் பக்கமாயும், பள்ளிக்குடா, இரணைதீவு, புங்குடுதீவு, எழுவைதீவு, மூன்றாம்பிட்டி ஆகிய பகுதிகளிலும் கடற்றொழில் செய்பவர்களே தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இப்படி மகஜரில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

# இராணுவத் தீர்வு காணும் சூதாட்டத்தில் இலங்கைத் தரப்பு

## இது புதுடில்லிக்கு தெரியாமல் இல்லை

புதுடில்லி, மார்ச். 19

விரைந்து தீர்வு காணப்படும் என்று சொல்லிக் கொண்டு இராணுவ தீர்வு காணும் சூதாட்டத்தில் இலங்கை தரப்பினர் ஈடுபட்டிருப்பது புதுடில்லி வட்டாரங்களுக்குத் தெரியாமல் இல்லை.

இப்படி பிரபல அரசியல் விமர்சகர் திரு ஜி. கே. ரெட்டி எழுதியிருக்கிறார்.

பண்டாரி - திலகரத்ன சந்திப்பு பற்றி 'இந்து' நாளிதழில் எழுதுகையிலேயே இக்கருத்தை திரு ரெட்டி வெளியிட்டிருக்கிறார்.

திரு திலகரத்தினவின் பேச்சு, அரச பயங்கரவாதத்தினால் இலங்கைத் தமிழர் மீது இழைக்கப்படும் அநீதிகளை பூசி மெழுகுவது போன்று அமைந்து இருந்தது.

துரதிருஷ்ட வசமாக இந்திய தரப்பில் இனப் பிரச்சினையில் பேசும் அதிகாரம் இன்னும் திட்டமாவட்டமாக ஒருவருக்கும் வழங்கப்படவில்லை.

திரு. பண்டாரி ஓய்வு பெற இன்னும் இரண்டு வாரங்களே உள்ளன.

வெளிநாட்டு அமைச்சு சாதாரண தொடர்புகளையே இலங்கையுடன் வைத்து உள்ளது. திட்டவட்டமான முறையில் தொடர்பு எதுவும் இல்லை.

தவிர்க்கப்படக் கூடிய இந்த இடைவெளியால் தவறான அபிப்பிராயங்கள் ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர் பிரச்சினை மீது ஆழமான நடவடிக்கை ஏற்பட்டுள்ளதாக எண்ணப் படவேண்டியுள்ளது.

இதனால், அயல்நாடு ஒன்றில் விமானத்தாக்குதல் மூலம் தமிழ்மக்கள் மீது இழைக்கப்படும் அநீதிகளைக் கட்டுப்படுத்த முடியாது, ஊமைச்சாட்சி ஒருவரின் நிலைமையில் இந்தியா இருக்க வேண்டியுள்ளதாகக் கருதப்படுகின்றது.

இப்படி திரு. ரெட்டி எழுதியிருக்கிறார்.



பொய்யாமொழி

குறள்:
உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

பொருள்:
கைம்மாறுகச் செய்யும் உதவி முன் செய்த உதவியின் அளவை உடையது அன்று; உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.

## மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது

### ஐ. நா. சாசனத்தைப் பேணும்படி கோருகிறார் யோகேந்திரா துரைசுவாமி

யாழ்ப்பாணம், மார்ச் 20

நாடுகளுக்கு இடையேயான மோதல்களிலும் பார்க்க நாட்டினுள் இடம்பெற்ற மோதல்களின்போதுதான் ஐ.நா. மனித உரிமை சாசனத்தில் கூறப்பட்ட கொள்கைகள் அதிக வலுவுடன் பேணப்படவேண்டும்.

காரணம் குடிமக்களைக் காப்பாற்றும் பொறுப்பு அரசாங்கத்திடம் இருப்பதுதான்.

இப்படி இந்துமத நிறுவனங்களின் கவுன்ஸில் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தனது அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

ஐ. நா. சபையில் இலங்கையும் ஒரு உறுப்பு நாடு.

அடிப்படை சுதந்திரம், மனித உரிமைகளுக்கு மதிப்பு, ஆகியவற்றை இன, மொழி, சாதி, சமய பேதமின்றி பேணப்பட வேண்டும் என்று ஐ.நா. சாசனம் வலியுறுத்துகின்றது.

மனித உரிமைபற்றி ஐ. நாவின் சர்வதேச பிரகடனத்தையும் இலங்கை ஆதரிக்கின்றது.

ஆயுதமோதலின் போது குடிமக்களைப் பாதுகாக்க பின்வரும் அடிப்படைக் கொள்கைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று ஐ நா. பொதுச்சபை 1970 ஆம் ஆண்டில் வலியுறுத்தியது.

அவையாவன:

அ. சர்வதேசசட்டம், அமைப்புக்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் ஆயுதமோதலின் போதும் பூரணமாக நடைமுறையில் இருக்கும்.

ஆ. இராணுவ நடவடிக்கைகளின்போது குடிமக்களுக்கும் மோதலில் ஈடுபடுபவர்களுக்கும் இடையே வித்தியாசம் காணப்படவேண்டும்.

இ. இராணுவ நடவடிக்கையின் போது, குடிமக்களுக்குக் காயம், இழப்பு, சேதம் ஏற்படாதவாறு பாதுகாப்பு வழங்கப்படவேண்டும்.

ஈ குடிமக்களை இலக்கு வைத்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது.

உ. குடிமக்கள் வாழும் வீடுகள். ஸ்தாபனங்கள் இராணுவ நடவடிக்கைகளின் இலக்காக இருக்கக்கூடாது.

ஊ. குடிமக்களைப் பாதுகாக்கும் ஸ்தாபனங்களான ஆஸ்பத்திரி, அகதி முகாம்கள் இராணுவ நடவடிக்கைகளின் இலக்காக இருக்கக்கூடாது.

எ. குடிமக்கள், தனிப்பட்டவர்கள் பழிவாங்கப்படக்கூடாது

குடிமக்களைப்பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்தால், யாழ் கோட்டைக்குள் இருக்கும் ஆயுதப்படை முகாமை வாபஸ் பெற வேண்டும். பாதுகாப்பு வலயம் என்ற தேவையே பின்னர் எழாது.

இப்படி திரு. யோகேந்திரா துரைசுவாமி அறிக்கையில் கூறியுள்ளார்.

இனங்களுக்கிடையில் மோதல்

## ஆண்களைப் பழிவாங்குவதற்காக பெண்கள்மீது குற்றம் இழைப்பு

### கொழும்பு மாதர் கருத்தரங்கில் தகவல்

கொழும்பு, மார்ச் 20

இரண்டு இனங்களுக்கு இடையேயான மோதலில் ஆண்களைப் பழிவாங்குவதற்காக பெண்கள்மீது குற்றம் இழைக்கப்படுகிறது.

இப்படி டாக்டர் (செல்வி) ராதிகா குமாரசாமி சொன்னார்.

இவர்கொள்ளுப்பிட்டியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் 'சமூக மாற்றத்தில் மாதர் தனித்துவம்' என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்தினார்.

டாக்டர் ராதிகா குமாரசாமி மேலும் சொன்னதாவது;

சர்வதேச மகளிர் ஆண்டை ஒட்டி கொழும்பில் ஓர் பேரணி நடத்தப்பட்டது. அதில் நானும் கலந்துகொண்டேன். பொலீஸார் வந்து பேரணியைக் கலைத்தனர். எம்மைக் கேலி செய்தனர். அதுமட்டும் அல்ல பொலீஸ் நிலையத்தில் இரவு தங்கும்படியும் கேட்டனர்.

எங்களுக்கே இந்த நிலை என்றால், சாதாரண பெண்களின் நிலைமையை எண்ணிப்பார்க்க முடியாமல் உள்ளது.

வடக்கு, கிழக்கு பகுதி [illegible] இழைக்கப்படும் பயங்கர சம்பவங்கள் பற்றி எமக்கு தகவல்கள் வந்து குவிகின்றன.

இப்படி டாக்டர் (செல்வி) ராதிகா குமாரசாமி சொன்னார்.

## சைவ ஆலயங்கள் பாதிப்பு; பாதுகாக்க விசேட குழு அமைக்கப்பட்டது

### நல்லை முதல்வர் கூட்டிய மாநாட்டில்

யாழ்ப்பாணம், மார்ச் 20

சைவ ஆலயங்கள், உடைமைகள், வழிபாடு ஆகியவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க சைவ ஸ்தாபன பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

நல்லை ஆதீன சோமசுந்தர பரமாசாரிய ஞான சம்பந்த சுவாமிகளின் அழைப்பின் பேரில் ஆலய நிர்வாகிகள், சைவக் குருமார்கள், சைவ சமய இயக்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட விசேட கூட்டம் கடந்த ஞாயிறு பிற்பகல் 2 30 மணிக்கு ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது அப்போது இக்குழு அமைக்கப்பட்டது.

பதினைந்து அங்கத்தவர்களைக் கொண்ட இக்குழு நடவடிக்கைக் குழுவாக இயங்க உள்ளது.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை அரச வன்செயல் காரண[illegible] இந்த [illegible] சைவக் குருக்கள், பத்தர்கள் விவரம், கோயில்களுக்கு விளைந்த சேதத்தின் மதிப்பீடு, ஆகியவற்றை திரட்டுவதும்;

அரசாங்கத்தின் பிரகடனங்கள் காரணமாகப் பூசைகள், திருவிழாக்கள், ஆகம நடைமுறைகள் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை சேகரிப்பதும்-இக்குழுவின் கடமையாக இருக்கும்.

இம்மாதம் 23 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இக்குழு மீண்டும் கூடி வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இக்குழுவில் அங்கம் வகிப்போர் விவரம் வருமாறு:-

புரவலர்: நல்லை ஆதீனம் சோமசுந்தர பரமாசாரிய ஞானசம்பந்த தேசிக சுவாமிகள்.

தலைவர் திரு. கு. நகுலேஸ்வரக் குருக்கள் திரு. பா வைத்தியநாத குருக்கள் திரு. து சண்முகநாத குருக்கள் பேராசிரியர் கா. கைலாசநாத குருக்கள் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. திரு. வி. என். சிவராசா, திரு ஏ. நாகராசா, திருமதி. பொன் கிருஷ்ணபிள்ளை, திரு ஐ. சண்முகலிங்கம், திரு தண்டபாணி தேசிகர், திரு.க. அருணாசலம், திரு ஆர். குலசேகரம், திரு.மு. ஞானப்பிரகாசம் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்.

சமய சந்திகளில்

### சிவன் ஆலய திருக்குள திருப்பணி வேலைகள்

புங்குடுதீவு, மார்ச் 20

புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலயத் திருக்குளத் திருப்பணி வேலைகள் இம்மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் தலைமையில் தொழிலதிபர் திரு. கா. சோமசுந்தரம் இத் திருப்பணி வேலைகளைச் சமயாசாரப்படி ஆரம்பித்து வைப்பார்.

### கந்தபுராண படிப்பு

பருத்தித்துறை, மார்ச் 20

பருத்தித்துறை தும்பளை அருள்மிகு நெல்லண்டை அம்பாள் ஆலயத்தில் தைப்பூசத்தன்று ஆரம்பமான கந்தப்புராணப் படிப்பு கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்று வருகின்றது.

இம்மாதம் 23 ஆம் திகதி சுவாமி திருமணப் படிப்பும் 26 ஆம் திகதி ஸ்ரீவள்ளி திருமணப் படிப்பும் நடைபெற்று இக்கந்தபுராணப் படிப்பு பூர்த்தியடையும்.

இம்மாதம் 27 ஆம் திகதி அன்னதானமும் மறுநாள் 28 ஆம் திகதி நிறைமணிப் பூசையும் நடைபெறும் என ஆலய முகாமையாளர் திரு. எஸ். பாலசுந்தரம் அறிவித்துள்ளார்.

வாசகர் திருமுகம்

## தட்டிக்கேட்க ஆளில்லை குருநகரில் இருள் சூழும் நிலை

விஞ்ஞானம் துரித வளர்ச்சியடைந்துவிட்ட இந்த இருபதாம் நூற்றாண்டில் மின்சாரத்தில் இயங்குகின்ற பொருட்களோ ஏராளம். வீட்டுக்கு வீடு மின்சாரப் பொருள்கள் ஆனால் மின்சாரப் பொருள்களை வாங்குகின்ற மக்களும், மின்விளக்குகளைப் பாவிக்கின்ற மக்களும் மின்சாரத்தை மட்டும் இலவசமாகப்பெற முயன்றுவிட்டார்கள். இந்த நிலைக்கு குருநகர்ப்பகுதி முதலிடம் வகிக்கின்றது.

இப்பகுதியிலுள்ள மூன்றிலொரு பகுதி மக்களே அனுமதிபெற்ற மின்சாரம் பாவிக்கிறார்கள். மூன்றில் இரண்டுபகுதி மக்கள் சட்டவிரோத மின்சாரம் பாவிக்கின்றார்கள்.

இந்த நிலையில் சட்டவிரோத மின்பாவனையை மின்பகுதி ஊழியர்கள் துண்டிக்கச் சென்றால் மின் ஊழியர்கள் தாக்கப்படவேண்டிய நிலை ஏற்படுகின்றது பதில் நடவடிக்கையை மின் ஊழியர்கள் எடுத்தால் மக்கள் எல்லோரும் பாதிக்கப்படுவார்கள்.

ஏனெனில் அப்படி ஒரு நடவடிக்கை மிக அண்மையில் மின் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டு யாழ்நகரமே இரண்டு நாட்கள் இருளில் மூழ்கியிருந்ததை யாவரும் அறிவார்கள்.

குருநகர்ப் பகுதியில் இயங்கிவரும் மின்மாற்றி வெகு விரைவில் மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றதாம் இன்றோ ,,, நாளையோ ... என்ற நிலையில் குருநகரில் மின்மாற்றி இயங்குகின்றது. அதிகமான பொதியைச் சுமக்கின்ற கழுதையின் நிலையில் இயங்கிவரும் குருநகர் மின்மாற்றிக்கு இன்னும் ஒருமாதம் வரை உயிர் இருக்குமென்பது சந்தேகமயுள்ளதாம்.

இந்த நிலையில் அந்த மின்மாற்றியின் உயிரைக் காப்பாற்றவும் குடிசனம் நெருங்கிய அப்பகுதியில் சட்டவிரோத மின்பாவனையால் ஏற்படும் விபத்துக்களிலிருந்து ஏதுமறியாத மக்களைக் காப்பாற்றவும் திருத்தவேலைகளை மேற்கொள்ள வரும் மின் ஊழியர்களின் உயிர்களைக் காப்பாற்றவும் குருநகர் பகுதியில் எந்த ஒரு பொது ஸ்தாபனங்களும் இல்லையா? அல்லது குருநகர்ப் பகுதியில் ஒரு இணக்கசபையோ அன்றி விழிப்புக் குழுவோ இல்லையா...? பொதுஸ்தாபனங்களுக்குக் கூட கட்டுப்படாத அளவுக்கு குருநகரில் இப்படி சட்டவிரோத மின்பாவனையா...?

இவற்றையெல்லாம் இப்படியே பார்த்திருந்தால் வெகுவிரைவில் இருளில் மூழ்கப்போகும் குருநகர் பகுதிக்கு யார் ஒளியேற்றுவார்கள்...? தற்போதைய சூழ்நிலையில் ஒரு புதிய மின்மாற்றியை தருவிக்க யாரால் முடியும்....? குருநகர் பகுதி இருளில் மூழ்கிய பின் எதற்கு பொதுஸ்தாபனங்களும்.. இணக்க சபைகளும்...? கண்கெட்டபின் சூரிய நமஸ்காரமா...?

திருட்டுக்களை தண்டிக்கும்பொதுஸ்தாபனங்களே இவையும் திருட்டுக்கள்தான் என்பதை தாங்கள் இன்னுமா புரியவில்லை..? தங்கள் மௌனம் இப்பகுதி மக்கள் அனைவரையும் பலகாலம் இருளில் மூழ்கடிக்கப்போகிறது என்பதை மறக்காமல் செயற்பட்டீர்களானால் யாவர்க்கும் ஒளிகிடைக்கும்.

—நலன்விரும்பி

## கல்வி அதிகாரியின் சேவைக்குப் பாராட்டு

கரவெட்டி, மார்ச் 20

யாழ் மாவட்ட பிரதம கல்வி அதிகாரியாக இருந்து வெ. சபாநாயகம் யாழ் மாவட்டத்திற்கு ஆற்றிய சேவை அளப்பரியது.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. ஈஸ்வரபாதம்மேற்கண்டவாறு கூறினார்.

உடுப்பிட்டி வட்டார ஆசிரியர் சங்கம் நடத்திய பிரியாவிடை வைபவம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இராசலிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. சி. வேலாயுதம் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. எஸ். ஜேய் காந்தராஜ்திரு.எஸ்.வின்சென்ற், திருமதி பி இராஜேந்திரசிங்கம், திரு. சி. திரவியம், செல்வி பி.முருகேசு, திரு கே. சிவபாதசுந்தரம், திரு. ஆ. கதிரவேலு, திரு மு. கந்தப்பு (மன்னவன்), திரு. என். சச்சிதானந்தம் ஆகியோர் பாராட்டு உரை நிகழ்த்தினர்.

இவ்வைபவத்திற்கு வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன் கணேசனும் சமுகம் அளித்திருந்தார்.

திரு. வெ சபாநாயகம் உரை நிகழ்த்துகையில் 28 ஆண்டு காலமாக கல்வித் திணைக்களத்தில் கடமை புரிந்து பதவி உயர்வுடன் வவுனியா செல்ல உள்ளேன்.

ஒரு அதிகாரி தனக்குக் கீழ் வேலை செய்பவரை தனக்குச்சமமாக நடத்த வேண்டும். நேரத்தைச் சிக்கனமாகக் கடைப்பிடிக்கவேண்டும் என்றார்.

நாட்டின்

## எந்தப் பகுதியிலும் தமிழர்கள் வாழலாம்! ஆனால் சிங்களவரால் முடியாது

### பௌத்த பிக்கு கவலை

கொழும்பு, மார்ச். 20

இலங்கையின் எப்பகுதியிலும் இன்று தமிழர் வாழமுடிகின்றது. ஆனால் சிங்களவர் அப்படி வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மடுல்வவ சோபித தேரர் கல்கிசையில் இடம்பெற்ற பத வைபவம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

தேரர் மேலும் சொன்னதாவது;

இலங்கையில் முதல் தடவையாக சிங்களவர் அகதிகளாக்கப்பட்டிருக்கின்றனர். நாட்டின் நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது.

இந்தநிலைமையில் எம்மவரினால் கிரிக்கட் விளையாட்டையும் ரசிக்கமுடிகிறது.

இன்று சிங்களவர் அனுராதபுரத்திற்கு அப்பாலும் ஹட்டனுக்கு அப்பாலும் போக முடியாது உள்ளனர்.

இன்றைய இழிநிலைக்கு இளஞ்சமுதாயம் முதியவர்களைத்தான் குற்றஞ்சாட்டும்.'

இப்படி தேரர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ரெலிபோன் வாங்க
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி சேவை
ரெலி: 25088 (6 தொடர்புகள்)

# உதயன்

20. 03. 1986 வியாழக்கிழமை

ரெலிபோன் பேச
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி சேவை
ரெலி: 25088 (6 தொடர்புகள்)

# யாழ் நகர வீதிகளில் போக்குவரத்து ஒழுங்கு கண்காணிப்பு

## 'ரெலோ' போராளிகள் நேற்றுமுதல் ஏற்பாடு

நல்லூர், மார்ச் 20

யாழ்ப்பாண நகரில் உள்ள முக்கிய வீதிகள் மீண்டும் போக்குவரத்து ஒழுங்கின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

தமிழ் ஈழ விடுதலை இயக்கப் போராளிகளினால் வீதி ஒழுங்கமைப்பு நேற்று முதல் யாழ்நகரில் கண்காணிக்கப்பட்டு வருகிறது

கஸ்தூரியார் வீதி, கே. கே. எஸ். வீதி, விக்ரோரியா வீதி போன்ற வீதிகளே தற்பொழுது இளைஞர்களின் கண்காணிப்பின் கீழ் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமாக தமிழீழ விடுதலை இயக்கம் ''போக்குவரத்து ஒழுங்கின் அவசியம்'' என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரமொன்றையும் வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

குறிப்பிட்ட காலங்களில் எமது மக்களால் போக்குவரத்து விதிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாது தவிர்க்கப்பட்டு வந்திருக்கிறது.

இதனால் பல விபத்துக்கள் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன

இவ்வாறான நிலைமைகளை நீக்கும் பொருட்டு போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்ள நாம் எண்ணியுள்ளோம்.

இதன்படி முதற்கட்டமாக மக்கள் அதிக நெருக்கமாக நடமாடும் பிரதேசமான யாழ் நகரத்தில் இவ் விதிகளை அமுல் நடத்தவும் தீர்மானித்துள்ளோம்

இப்படி அத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூஸாவிலிருந்து விடுதலை

மட்டக்களப்பு, மார்ச் 20

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 தமிழர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்

விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவர் முஸ்லிம், அவரின் பெயர் முகமது அனிபா.

# 84 இளைஞர்கள்

## பூஸாவிலிருந்து விடுதலை

### திருமலை வந்து சேர்ந்தனர்

திருகோணமலை, மார்ச் 20

திருகோணமலைமாவட்டத்தைச் சேர்ந்த 84 தமிழ் இளைஞர்கள் பூஸா தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

நேற்றுப் பகல் ரயில் மூலம் திருகோணமலை வந்து சேர்ந்தனர்.

திருமலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு கே சிவபாலன் முன்னிலையில் சென் ஜோசப் கல்லூரியில் வைத்து, விடுவிக்கப்பட்டவர்கள் அனைவரும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## விட்டாரே ஓர் அறை!

கொழும்பு, மார்ச் 20

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தாதி ஒருவர், வேலைக்குப் போன தாதிக்கு விட்டார் ஓர் அறை.

இது கொழும்பு ஆஸ்பத்திரி ஒன்றில் நேற்றுப் பகல் இடம் பெற்றது.

கொழும்பு ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் சுமார் எண்ணூறு தாதிகளில் பெரும்பான்மையோர் வேலைக்கு நேற்றுப் போகவில்லை.

அரசாங்கத்தின் இறுதி எச்சரிக்கையைப் புறக்கணித்து வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்த அரச தாதிமார் சங்கம் தீர்மானித்துள்ளது.

## அருண்டேல் நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

மறைந்த நாட்டிய மேதை ருக்மணி அருண்டேலின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறையும், இராமநாதன் நுண்கலைப் பிரிவும் இணைந்து நடத்தும் இக்கூட்டம், கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்

துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி நினைவுரை நிகழ்த்துவார்.

நாட்டிய மேதை ருக்மணிதேவி அவர்கள் பரத நாட்டிய மரபில் ஏற்படுத்திய அபிவிருத்திகட்கு உதாரணமாக கிருஷ்ண சப்தம் என்ற நாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெறும். விரிவுரையாளர் செல்வி சாந்தா பொன்னுத்துரை இதனைத் தயாரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் நேற்று 12 பேர்கைது

யாழ்ப்பாணம், மார்ச் 20

நேற்று மாலை மன்னார் பட்டினத்தில் ராணுவத்தினர் சுமார் 12 பேரை கைது செய்தனர்.

அதன் பின்னர் தள்ளாடி கந்தோர் பக்கமாக துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்டன.

# முஸ்லிம் விவசாயிகள் ஐவரும் கைகளை உயர்த்தியபடி வந்தனர்

## அதன்பின்பு வேட்டுகள் வீழ்ந்தன

### மரண விசாரணையில் சாட்சியம்

திருகோணமலை, மார்ச் 20

5 முஸ்லிம் விவசாயிகளும் கைகளை மேலே உயர்த்தியபடி சிப்பாய்களுக்குமுன்னே வந்தனர். அதன் பின்னர் சரமாரியாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

இப்படி முஸ்லிம் நபர் ஒருவர் சாட்சியமளித்தார்.

மார்ச் 16ஆம் திகதி காலை 10 மணியளவில் மூதூர், மல்லிகைத் தீவுச் சந்தியில் வைத்து 5 முஸ்லிம் விவசாயிகள் துப்பாக்கிச்சூட்டுக்கு தாக்கி மரணமானார்கள்.

அதுபற்றிய மரண விசாரணை மூதூர் நீதிவான் திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை முன்னிலையில் நடைபெற்றது

அப்பொழுது சாஹுல் ஹமீது அக்பர் (வயது 30) சாட்சியமளித்தார்.

அவர் சொன்னதாவது: மார்ச் 16ஆம் திகதி காலை சூடுமிதிப்பு சம்பந்தமான ஒழுங்குகளைச் செய்ய பூமாவெட்டைக்கு நான் சென்றேன். இன்னும் இரண்டு பேருடன் நான் டிராக்டர் வரும்வரை பார்த்துக் காத்துக்கொண்டிருந்தேன்.

அந்தச் சமயம் மல்லிகைத்தீவுச் சந்தியில் துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது. பின்னர் சந்தியில் சிப்பாய்கள் நிற்பதைக் கண்டேன். அந்த நேரம் தோப்பூர் பக்கத்தில் இருந்து ஐந்து மாட்டுவண்டில்கள் வந்தன. அவற்றில் நெல் ஏற்றப்பட்டிருந்தன.

வண்டில்களை நிறுத்தும்படி சிப்பாய்கள் சைகை காட்டினர். உடனே வண்டில்கள் நிறுத்தப்பட்டன.

வண்டில்களை ஓட்டி வந்த 5 பேரும் இறங்கி கைகளை மேலே உயர்த்தியபடி முன்னே வந்தனர்.

அதன் பின்னர் பல வெடிச்சத்தங்கள் கேட்டன. நான் பயத்தில் அருகில் இருந்த கொட்டிலுக்குள் சென்று பதுங்கிக் கொண்டேன்.

இப்படி சாட்சி சொன்னார்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள், எரிகாயங்கள் காரணமாக மரணம் சம்பவித்தது என்று வைத்திய அதிகாரி டாக்டர் யோகராஜா சொன்னார்.

கொலைகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது

இறந்த ஐந்து பேரின் பெயர்கள் வருமாறு:

1. சீனி முகமது ஜமால் வயது 30
2. வாப்புத்தம்பி அபூபக்கர் தயான், வயது 30
3. அபதுல் சமது நூருல் லெப்பை, வயது 28.
4 மூகிதீன் பாவா இப்ராஹிம் முகமது, வயது 28.
5. சேகு நைனார் சித்திக் முகமது, வயது 25.

## பத்திரிகை அலுவலகத்தில் பதற்றம்!

கொழும்பு, மார்ச் 20

கொழும்பு புளூமென்டால் வீதியில் உள்ள 'த ஐலண்ட்' ஆங்கில நாளிதழின் அலுவலகத்தில் சில நிமிடங்கள் பதற்றம் ஏற்பட்டது

வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக அனாமதேயத் தொலைபேசி அழைப்பு அந்த அலுவலகத்துக்கு நேற்று நண்பகல் அளவில் சென்றது.

அதைத் தொடர்ந்து அலுவலகம் பதற்றம் அடைந்தது மூலை, முடுக்கு எல்லாம் தேடுதல் நடத்தப்பட்டது.

இறுதியில் அப்படி ஒரு பார்சலும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அதன் பின்னரே பதற்றம் தணிந்தது.

ஸ்ரான்லி வீதியில் (ஆர். ஜி. கட்டிடம்) உள்நாட்டு வெளிநாட்டு ரெலிபோன் அழைப்புக்கள் பெற்றுத்தரும் புதிய நிறுவனமாகிய 'ரெலிகுளோப்' அமைக்கப் பெற்றது என்பதைத் தமிழ் பேசும் பெருமக்களுக்கு இந் நிறுவனத்தினர் அறியத்தருகின்றார்கள்.

பாதுகாப்பான சூழலில் பணிவும் பக்குவமும் மிக்க சேவையை எதிர்பார்க்கும் பெருமக்களுக்கு முற்றிலும் திருப்தியளிக்கக்கூடிய ஒரே ஒரு நிறுவனம் 'ரெலிகுளோப்' என்பதனையும் பணிவுடன் அறிவித்துக் கொள்கின்றார்கள்.

(Advt.)

## விடுதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கொல்லப்படுகின்றனர்.

இதே நேரத்தில் கூட்டணியின் மாற்று யோசனைகள் குறித்து இலங்கை அரசிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் இலங்கை அரசுடன் எந்தத் தொடர்பையும் நாம் வைக்கவில்லை; வைக்கப் போவதும் இல்லை.

வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனங்கள் சிலவற்றைப் பயன்படுத்தி தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழர் விடுதலை அமைப்புக்களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தவும் இலங்கை அரசு முயற்சிக்கிறது.

தமிழ் மக்கள் விழிப்புடன் இருந்து இச்சதி முயற்சிகளை முறியடிக்க வேண்டும்.

இப்படி திரு அமிர்தலிங்கம் சொன்னார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நஷப்ருடமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 20-03-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ60/N/86

அக்மீமன இடைத்தேர்தல்

# வாசுதேவ போட்டியிடவில்லை

கொழும்பு, மார்ச் 20

அக்மீமன இடைத் தேர்தலில் நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார போட்டியிடவில்லை.

அக்மீமன இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நாளை (21-3-86) காலையில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இத்தேர்தலில் போட்டியிட திரு வாசுதேவ நாணயக்கார கட்டுப் பணம் செலுத்தி இருந்தார்.

இப்போது, தான் போட்டியிடப் போவது இல்லை என்று அறிவித்து விட்டார்.

சமசமாஜக் கட்சி ஆதரவளிக்க முடியாது என்று அறிவிக்கப்பட்டதே இதற்குக் காரணம்

இலங்கை மக்கள் கட்சி திரு. நாணயக்காராவை ஆதரிக்க முன்வந்தது.

ல.ச.ச.க, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் கட்சி கூட்டணியின் ஆதரவை நம்பியே திரு. நாணயக்கார போட்டியிட முன்வந்தார்.

## மூதூரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டத்துடன் தொடர்பு கொண்டிருக்கின்றார்.

5 முஸ்லிம் விவசாயிகள் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்ட செயலை ஆட்சேபித்து மூதூரில் உள்ள முஸ்லிம் மக்கள் கடையடைப்பு நடத்தினர்

## தமிழகம் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தத்துவங்களை மீறி தமிழரின் உயிர், உடைமைகளை அழிப்பதில் இலங்கை அரசின் ஏவலில் ஆயுதப் படைகள் ஈடுபட்டுள்ளன.

தமிழக மக்களின் வேண்டுகோள்களை ஏற்று மத்திய அரசு செயல்படுகிறது

மீண்டும் ஒரு முறை தமிழ்நாடு அரசு இலங்கைத் தமிழர் நிலை குறித்தும், அதனை விரைவாகத் தீர்க்கவேண்டியதன் அவசியம் குறித்தும் மத்திய அரசிடம் விளக்கமாக எடுத்துரைக்கும். — இப்படி திரு நெடுஞ்செழியன் சொன்னார்.

## தெல்லிப்பழை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] இத் தீவிபத்தையடுத்து [illegible] மொத்த விற்பனவு இன்று இடம்பெறவில்லை.

## ராஜீவ் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்து விட்டார்கள்—

இந்தியாவின் நல்லெண்ணத்தையும் உதவியையும் பெற்று இனப்பிரச்சினையை விரைவாக தீர்க்க வேண்டும் என ஜனாதிபதி விரும்புகிறார்—

வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியின் வருகையை எமது ஜனாதிபதி வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்— என்று திரு. திலகரத்தின காந்தியிடம் தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் அமைதி குலைந்து இருப்பது குறித்தும், அங்கு அண்மையில் நடந்த பல சம்பவங்கள் குறித்தும் பிரதமர் ராஜீவ் காந்தி திரு. திலகரத்தினவிடம் கவலை தெரிவித்தார்.

## காத்தான்குடி ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

காத்தான்குடிப் பகுதியில் ஆயுத பாணியாக இந்தமுஸ்லிம் ஊர்காவல் படையினர் நடமாடுகின்றார்கள்.

காத்தான்குடிப் பகுதியிலும் ஏனைய சுற்றுப் புறங்களிலும் தமிழ்-முஸ்லிம் ஒற்றுமைக்காக உழைத்து வரும் மதப் பிரமுகர்கள் மத்தியில் ஊர்காவல் படை நியமிக்கப்பட்டவிஷயம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஊர்காவல் படை அமைக்கப்பட்டது தமிழ்-முஸ்லிம் ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படுத்திவிடுமோ என்று மதப்பிரமுகர்கள் அச்சம் தெரிவித்துள்ளனராம்.

பொதுத் தேர்தல் இல்லையேல்

# மார்க்கோஸுக்கு நடந்த கதியே இந்நாட்டுத் தலைவர்களுக்கும்

## சிறிமா சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 20

பொதுத் தேர்தலை நடத்தி மக்களின் சம்மதத்தைப் பெற மறுத்தால் நாட்டின் ஆட்சித் தலைவர்களுக்கு, பிலிப்பீன்ஸில் மார்க்கோஸுக்கு ஏற்பட்ட கதி தான் ஏற்படும்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மஹரகமவில் கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

திருமதி பண்டாரநயக்கா மேலும் சொன்னதாவது:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மாவட்ட சபைத் தேர்தலை நடத்த அரசு ஏற்பாடு செய்கின்றது. அப்படி நடத்தப்பட்டால் அது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாகம் அரசாங்கத்தின் கையில் இல்லை என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டும்

மாவட்ட சபைத் தேர்தலை நடத்தப் போகும் இந்த அரசாங்கம் பொதுத் தேர்தலை நடத்தச் சூழ்நிலை சரியாக இல்லை என்று கூறுகின்றது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார்.

## வீர அஞ்சலி

யாழ்ப்பாணம், மார்ச் 20

முரசுமோட்டை மோதலில் பலியான போராளி கிருபாகரனுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் வீர அஞ்சலி செலுத்தியுள்ளது

மார்ச் 18 இல் நடந்த முரசுமோட்டை மோதலிலேயே வீர மரணம் அடைந்தார் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கம் விடுத்த அஞ்சலியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# 3,500 தாதிமார் வேலை நீக்கம்

கொழும்பு, மார்ச் 20

கடமைக்குச் செல்லாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 3 ஆயிரத்து 500 அரசாங்கத் தாதிமார் வேலை இழந்தனர்.

வேலைக்குத் திரும்புவதற்கு நேற்று வரை இவர்களுக்கு காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது.

நேற்று வேலைக்குத் திரும்பாவிடில் இவர்கள் அனைவரும் தாமாகவே வேலை இழந்ததாகக் கருதப்படுவர் என அரசு அறிவித்திருந்தது.

ஆனால் அவர்கள் வேலைக்குத் திரும்பவில்லை

இதனால் இவர்கள் அனைவரையும் வேலை இழந்ததாகக் கருதுவது என்றும்-

இதனால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு புதிய தாதிமார்களை நியமிக்க விண்ணப்பங்களைக் கோருவது என்றும் நேற்று அமைச்சரவை முடிவு செய்தது.

## மட்டுநகரில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு!

மட்டக்களப்பு, மார்ச் 20

மட்டக்களப்பு நகரில் உள்ள பிரபல கராஜ் ஒன்றில் நேற்று இரவு 7.30 மணியளவில் அடுத்தடுத்து துப்பாக்கி வேட்டுகள் கேட்டன.

இதனையடுத்து கல்லடி முகாமிலிருந்து சிறுடையினர் அப்பகுதியை நோக்கி விரைந்தனர்.

துப்பாக்கி வேட்டுகளினால் ஏற்பட்ட உயிர், உடைமை இழப்புகள் பற்றி செய்தி அச்சுக்குப் போகும் வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

மேற்படி கராஜ் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானது. அவரை அவரது காருடன் சேர்த்துக் கடத்த போராளிகள் கடந்த வாரம் எடுத்த முயற்சி தோல்வியடைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## உருக்குலைந்த . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

கடந்த 14ஆம் திகதி பரந்தன் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இறந்த வெள்ளைச்சாமி தினகரநாதன் என்பவரின் சடலமே கடந்த திங்கள் அன்று இப்படி அடக்கம் செய்யப்பட்டது.

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட சடலம் மிகவும் உருக்குலைந்த நிலையில் துர்நாற்றம் வீசியதால் சடலம் உரியஇடத்திற்கு கொண்டு செல்லப்படவில்லை. கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள திருநகர் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

## அன்ட்ரூ . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யான ஸாரா பேர்குஸனுக்கும் (வயது 26) திருமணம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

இளவரசர் அன்ட்ருவுக்கு பல பெண்களுடன் காதல் தொடர்பு இருந்து வந்ததாக அவ்வப்போது செய்திகள் வெளிவந்தன.

மாடல் அழகி கூஸ்டாக்கிற்கும் இளவரசருக்கும் இடையில் இருந்த தொடர்புகள் பத்திரிகைகளினால் பரகசியமாக்கப்பட்டது தெரிந்ததே.

## ரொனிக்கு டாக்டர் பட்டம்

கொழும்பு, மார்ச் 20

நிதி அமைச்சர் ரொனி டி மெல்லுக்கும் டாக்டர் பட்டம் வழங்கப்படப் போகின்றது.

ருகுணு மக்களுக்கு அவர் ஆற்றிய சேவைகளைக் கௌரவிக்குமுகமாக கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்க ருகுணு பல்கலைக் கழகம் தீர்மானித்துள்ளது.

## மீன்பிடித் தடை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாவாந்துறை, கொழும்புத்துறை, குருநகர் ஆகிய பகுதிகளிலிருந்து புறப்பட்ட இப்பேரணிகள் அந்தந்தப் பகுதிகளில் உள்ள சகல வீதிகளினூடாகவும் யாழ். பேராலயத்தை காலை பத்து மணியளவில் சென்றடைந்தன.

அங்கு சகல அமைப்புகளும் ஒன்று சேர்ந்து பிரமாண்டமான பேரணி ஒன்றை காலை 10·30மணியளவில் ஆரம்பித்தன.

கத்தோலிக்க மதகுருமார்களும்சேர்ந்துகலந்து கொண்ட இப்பேரணி பேராலயத்தில் இருந்து புறப்பட்டு பிரதான வீதி, மாட்டின் வீதி, ஷப்பல் வீதி, வேம்படிவீதியூடாக ஆஸ்பத்திரிச் சந்தியை அடைந்து பின்னர் ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ். செயலகத்தைச் சென்றடைந்தது.

கடந்த காலங்களில் கடற்படை, விமானப் படை தாக்குதல்களால் மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களைச் சித்திரிக்கும் சுலோகப் படங்களும் இப்பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன.

சிறுவர் முதல் பெரியோர் வரை ஆண்கள், பெண்கள், பள்ளிக்கூட மாணவர்கள் உட்பட பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் பேரணியில் கலந்து கொண்டனர்.

சென்ஜேம்ஸ் ஆலய பங்குக் குரவர் பீற்றர் துரைரத்தினம் இப்பேரணிக்குத் தலைமை வகித்தார். யாழ்.பேராலய பங்குக் குரவர் கில்லறி ஜெபநேசன், நாவாந்துறை பங்குக் குரவர் பி. எம் இம்மானுவல்பாஸையூர் தேவாலய பங்குக் குரவர் ஜோசப் பிரான்சிஸ், கிளிநொச்சி பங்குக் குரவர் எம் ஈ. பயாஸ், ஊர்காவற்றுறை பங்குக் குரவர் கிருபானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யாழ்.செயலகத்தை இப்பேரணிஅடைந்ததும் கடந்த காலங்களில் கொல்லப்பட்ட மீனவர்களுக்கு செயலகமுன்பாக ஒரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன் பின்னர் அரசாங்க அதிபர் திரு.எம். பஞ்சலிங்கத்திடம் டாக்டர் ஜே பி.பிலிப் மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

### அரச அதிபர் உரை

மகஜரைப் பெற்றுக் கொண்ட யாழ். அரசாங்க அதிபர் அங்கு குழுமியிருந்தோர் மத்தியில உரை நிகழ்த்தினர்.

எமது நாட்டுக்குத் தேவையான மீனில் 20 சதவீதம் எமது பகுதியில் இருந்துதான் செல்கின்றது.

எனவே தற்போது இலங்கை முழுவதும் பாதிக்கப் பட்டிருக்கிறது. வடபகுதியில் உள்ள 80 ஆயிரம் மீனவர்களில் 15ஆயிரம் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்கியிருக்கின்றன.

எனவே இம் மகஜரை உரிய இடத்திற்கு அனுப்பி உங்கள் கஷ்டங்கள் நீங்கும் பொருட்டு உடனடியாக கடல் வலயச் சட்டத்தை வாபஸ்பெறும்படி அரசாங்கத்தைக் கோரவுள்ளேன் — இப்படி அவர் சொன்னார்.

## அந்தச் சடல.. ;

(1-ம பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன.

இதேவேளை கடந்த சனிக்கிழமை பரந்தனில் இடம் பெற்ற ரயில் விபத்தில் சிக்குண்டு மரணமான வவுனியாவைச் சேர்ந்த எஸ். திருக்குமார், யாழ்ப்பாணம் குருநகரைச்சேர்ந்த நியூட்டன் ஜெயராசா ஆகியோரது சடலங்கள் உறவினரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த இருவரது பிரேத பரிசோதனைகளை கிளிநொச்சி நீதிவான் திரு. கே. பாலசந்திரனின் உத்தரவின் பேரில் தனியார் வைத்தியசாலை உரிமையாளரான டாக்டர் கே. ஸ்ரீரஞ்சன் மேற்கொண்டார்.

## மோட்டார் சைக்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வழியே கால் நடையில் ரோந்து சென்ற சமயம் வாழைச்சேனையில் இருந்து மட்டுநகர் நோக்கி மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் வருவதைக் கண்டனர்.

நிறுத்துமாறு உத்தரவிட்டனர். நிற்காமல் போகவே சுட்டனர். சுட்டபின்னரும் மோட்டார் சைக்கிள் நிற்காமலே சென்றது.

கால் மைல் தூரம் தள்ளி வீதியில் ஒருவரின் சடலம் கிடந்தது. மற்ற இளைஞர் மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்று விட்டார்.

வீதியில் கிடந்த சடலத்தை சிப்பாய்கள் கொண்டு சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org